மழலை மொழி

குழந்தைப் பாடல்கள்

T. 14574

மணி மன்றம்

"எங்கள் தமிழ்"

கலைகள் நிறைந்ததுவும் எங்கள் தமிழே—நல்ல
காவியங்கள் திகழ்வதும் எங்கள் தமிழே—எழில்
மலர்கள் அரும்புவதும் எங்கள் தமிழே—புகழ்
மாலைகள் சூடுவதும் எங்கள் தமிழே.

ஆற்றொழுக்குப் போலவரும் எங்கள் தமிழே—மிக்க
ஆர்வநிறை மொழியுள்ள தெங்கள் தமிழே—நல்ல
ஊற்றுப்போல ஊருவதும் எங்கள் தமிழே—பெரும்
ஊதையென வருவதும் எங்கள் தமிழே.

கற்கண்டோ பாகோவென்று மயங்கிடவே—நல்ல
கம்பனும் பாடியது எங்கள் தமிழே—ஆதி
அற்புதம் என்றுலகம் போற்றிடவே—நீதி
அறைந்த திருக்குறளும் எங்கள் தமிழே.

தேனினு மினியநற் சொற்களாலே—இசைச்
சிலம்பு ஒலிப்பதுவும் எங்கள் தமிழே—உயர்
வானினும் உயர்ந்த கவிமலர்கள்—இன்ப
மணம்நின்று கமழ்வதும் எங்கள் தமிழே.

இயல்லிசை நாடகம் எனப்பெயரால்—கிளை
இசைபெறக் கொண்டதும் எங்கள் தமிழே—பெரும்
புயலென எழும்பிய அருங்கவிகள்—பெற்றுப்
புதுவளங் கொண்டதும் எங்கள் தமிழே.

மின்னொளி போல்ஒளி வீசிவந்தே—பாதை
விளக்கும் கவிதைசொல்லும் எங்கள் தமிழே—எங்கும்
பொன்னொளி காட்டியே நிரந்தரமாய்—நலப்
புதுமைகள் சுடர்வதும் எங்கள் தமிழே.

"ஒளி வைரம்"

மணி வெளியீடு-4

மழலை மொழி

குழந்தைப் பாடல்கள்

இயற்கை

தொகுப்பாசிரியர் :
ப. நீலகண்டன்

பதிப்பாசிரியர் :
இ. சி. குழந்தைவேலன்

மணி மன்றம்
தமிழ் நூல் வெளியீட்டகம்
மதுரை ரோடு திருச்சிராப்பள்ளி

இரண்டாம் பதிப்பு: சர்வசித்து, சித்திரை, (ஏப்ரல் 1947)

விலை
அணா 6

பதிப்புரிமை

சிட்டி பிரஸ், :: மதுரை ரோடு, திருச்சி

முன்னுரை

'மழலை மொழி' என்னும் பெயரில், குழந்தைகள் விரும்பும் பாடல்களைத் தொகுத்துச் சில நூல்கள் வெளியிட விரும்பினேன். எனது விருப்பத்திற்கிணங்கிப் பல அறிஞர்களாகிய நண்பர்கள் தமது அரிய பாடல்களை மகிழ்வுடன் அனுப்பி உதவினார்கள். அவர்கள் யாவர்க்கும் எனது நன்றி உரியதாகும்.

இயற்கை என்னும் கருத்துக்கிணங்கிய சில பாடல்கள் இத்தொகுதியில் வெளியாகின்றன. இவற்றைப் பதிப்பதில் ஊக்கம் காட்டித் திருத்த முற அமைத்தவர் எனது நண்பர் திரு. தி. சி. குழந்தைவேலன் அவர்கள்.

பிராணிகள், பொருள்கள், என்று வேறு சில பாடல் தொகுதிகளும் வெளிவரும்.

இவற்றை வெளியிட முன்வந்த மணிமன்றத்தாரின் தமிழ்த் தொண்டு பாராட்டற்குரியது.

ப. நீ.

பதிப்புரை

இனிய மெட்டு, எளிய சொற்கள் அமைந்த பாடல்களைக் குழந்தைகள் விரும்புகிறார்கள்; பிறர் வற்புறுத்தலின்றிப் பாடியாடிக் களிக்கிறார்கள். இது அவர்கள் இயற்கை.

அரிய கருத்துக்கள் நிரம்பிய எளிய இனிய பாடல்கள் குழந்தைகளின் அறிவை இவ்வியற்கை வழியில் வளர்க்கச் சிறந்த சாதனமாகும்.

இக் கருத்தினால் விளைந்த பயனே இப்பாடல் தொகுதி நூல். எளிமை, இனிமை நுண்கருத்து ஆகிய பண்புகளுடன் மிளிரும் அழகிய பாடல்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. இயற்கை என்னும் நோக்குடன் இவை தொகுக்கப்பெற்றுள்ளன.

தமிழிலும் ஆங்கிலத்திலும் வல்லவர்களான அறிஞர்களும், இளம் எழுத்தாளர்களும் இப் பாடல் தொகுதியை அணி செய்கிறார்கள். இவர்கள் யாவருக்கும் மன்றத்தின் நன்றி.

பாடல்களை வரவழைத்து உதவியவர் திரு. ப. நீலகண்டன் அவர்கள். இவர் முயற்சி பாராட்டற்குறியது. மன்றத்தின் நன்றி இவர்க்கு உரியது.

தி. சி. கு.

பாடல் வரிசை

[பொருளுக்கேற்ப வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.]

	பாடல்	ஆசிரியர்
1.	இயற்கையைப் பார்!	தே. ப. பெருமாள்
2.	கடல்	ஏ. மீனாட்சி B.A., B.T.,
3.	கடல் காட்சி	"தாராபதி"
4.	இருசுடரும் என்வாழ்வும்	"பாரதிதாசன்"
5.	பொய்கை	"செந்தாமரை"
6.	அம்புலி	"குயிலன்"
7.	நிலா	"கம்பதாசன்"
8.	சூரியன்	ஏ. மீனாட்சி B.A., B.T.,
9.	வெயில்	ரா. ஆறுமுகம்
10.	அந்தி	கரு. சுப்பையா
11.	வானவெள்ளி	என். இராகவன்
12.	வானவில்	"கனகம்"
13.	,,	"குத்தாலநாதன்"
14.	மழை	சொக்கலிங்கம்
15.	,,	அழ. வள்ளியப்பா
16.	நதி	எஸ். சிதம்பரம்
17.	ஆறு	முருகு. சுப்பிரமணியம்
18.	மலர்	எஸ். சிதம்பரம்
19.	பூக்கள்	அழ. வள்ளியப்பா
20.	ரோஜா	தே. ப. பெருமாள்
21.	தாமரை	"தில்லைக்கூத்தன்"
22.	வசந்தம்	,,
23.	தோட்டம்	"பாரதிதாசன்"
24.	தென்னைமரம்	சொக்கலிங்கம்
25.	செடியின் கதை	தே. ப. பெருமாள்
26.	முல்லை	த. ப. நாதன்

இயற்கையைப் பார்!

காவில் பூத்த பூக்களையே
கண்ணே! நீயும் கண்டிடுவாய்!
நோவும் துன்பம் நீக்கிஅவை
நுவலும் மகிழ்வைப் பெற்றிடுவாய்!

தேனும் கசக்க இசைசெப்பும்
தீங்குரல் குயிலைப் பார்த்திடுவாய்!
ஈனக் கவலையை மாற்றுகின்ற
இயல்பை நமக்கது காட்டிடுமே.

வாட்டம் இன்றித் திரிகின்ற
வண்டை நீயும் நோக்கிடுவாய்!
நாட்டம் தொழிலில் வைத்திடவே
நம்மை அதுவும் தூண்டிடுமே.

வானம் உதிக்கும் சந்திரனும்
வண்ணக் கதிரால் ஆழியினைக்
கானம் இசைத்துக் களிப்பிக்கக்
கண்டே நலஞ்செயத் துணிவாயே!

தாவி முன்னே செல்கின்ற
தன்மை நல்நதி எப்போதும்
மேவி வாழ்வில் முன்னேறி
வெல்லும் எண்ணம் ஈந்திடுமே!

உன்னைச் சூழ்ந்த இயற்கையினை
ஊன்றி நன்கு நோக்குவையேல்
இன்னும் பலவாம் பாடத்தை
எளிதில் நீயும் கற்பாயே!

தே. ப. பெருமாள்

கடல்

கடற்கரையில் நின்றுகடல்
காட்சி கண்டால்
கடவுளின் மாண்பு நன்றாய்க்
காணுதம்மா !

அடிக்கடலைப் பெட்டகமாய்
ஆக்கிஅதன்
அடியினில் முத்துக்களும்
பவளம் வைத்தார்.

இப்புவியில் உள்ளோரெலாம்
எடுத்துண்ண
உப்பினையும் உண்டாக்கி
நீரில் வைத்தார்.

கடற்காற்றுப் பட்டவுடன்
காற்றாகவே
உடற்பிணி ஓடுமாறு
உதவியுள்ளார்.

எல்லையற்ற அலைகடலை
இயற்றியவர்
எல்லையற்ற திறமுடையார்
என்றறிக.

ஏ. மீனாட்சி, B.A., B.T.

கடல் காட்சி

ஓவென் றலறிக் குமுறுதம்மா!—எனது
உள்ளம் நடுங்கித் துடிக்குதம்மா!

அலைமேல் அலையாய்த் தோன்றுதம்மா!—எந்தன்
அங்கம் முழுதும் பதறுதம்மா!

நெருங்கி நெருங்கி வருகுதம்மா!—இங்கே
நிற்கவும் பயமுண் டாகுதம்மா!

பால்போல் நுரையைக் கக்குதம்மா!—நம்
பாப்பாவைப் போலத் தவழுதம்மா!

கட்டுக் கடங்காக் கடலிதற்கும்—ஒரு
கரைதான் எப்படிப் போட்டனரோ!

வானும் கடலுமொன் றாகுதம்மா!—அங்கே
வட்ட மதியமும் காணுதம்மா!

அம்புலி முளைப்பதும் இங்கேயோ?—தினம்
ஆதித்தன் தோன்றுதல் இங்கேயோ?

கண்டுகொண் டேன்இரு கண்ணாலே—வெய்ய
கதிரவன் இரவில் தங்குமிடம்!

"மாறன்"

இருசுடரும் என்வாழ்வும்

காலை

ஒளியைக் கண்டேன் கடல்மேல்—நல்
உணர்வைக் கண்டேன் நெஞ்சில்!
வெளியைக் கண்டேன் பொன்னின்—கதிர்!
நிறையக் கண்டேன் உவகை!

துளியைக் கண்டேன் முத்தாய்க்—கள்
துள்ளக் கண்டேன் விழியில்!
தெளியக் கண்டேன் வையம்—என்
செயலிற் கண்டேன் அறமே!

மாலை

மறையக் கண்டேன் கதிர்தான்—போய்
மாயக் கண்டேன் சோர்வே!
நிறையக் கண்டேன் விண்மீன்—என்
நினைவிற் கண்டேன் புதுமை!

குறையக் கண்டேன் வெப்பம்—எனைக்
கூடக் கண்டேன் அமைதி!
உறையக் கண்டேன் குளிர்தான்—மேல்
ஓங்கக் கண்டேன் வாழ்வே!

பாரதிதாசன்

பொய்கை

வண்டாடும் பொய்கை—மலர்த்
தண்டாடும் பொய்கை—அதைக்
கண்டாடும் பரிதி—தனைக்
கொண்டாடு துள்ளம்.

அலைநெளியும் பொய்கை—உயர்
மலைநெளியும் பொய்கை—தளிர்
இலைநெளியும் பொய்கை—உயிர்க்
கலைநெளியும் பொய்கை.

மீனாடும் பொய்கை—முகில்
வானாடும் பொய்கை—தேன்
ஈநாடும் பொய்கை—தினம்
நானாடும் பொய்கை.

யுகங்காட்டும் பொய்கை—பல
சுகங்காட்டும் பொய்கை—குளிர்
முகங்காட்டும் பொய்கை—உன்
அகங்காட்டும் பொய்கை.

அம்புலி

அம்புலி அம்புலி ஓடிவா !
ஆகா சத்திலே பறந்துவா !
தம்பியும் நானும் விளையாட
சட்டென வெளிச்சம் காட்டவா !

பட்டப் பகலில் அம்புலியே
பதுங்கிக் கிடந்தது எங்கேசொல் ?
வட்ட வடிவாய் இன்றைக்கு
வந்தே வெளிச்சம் காட்டிடுவாய் !

மேகம் இல்லை இன்றைக்கு
மின்னல் இல்லை இன்றைக்கு
வேகம் செய்து வந்திடுவாய்
விரைவில் நாங்கள் விளையாட

'கண்ணும்பூச்சி' ஆடிடுவோம்
'கவடி' பத்தி ஓடிடுவோம்
அண்ணன் தம்பி எல்லோரும்
அம்புலிப் பாட்டுப் பாடிடுவோம்.

குயிலன்

நிலா

அம்மா! இதோ பார்!—நான்
ஆடும் ரப்பர் பந்து!
அம்பிப் பயல் எடுத்து
ஆகா யத்தில் எறிந்தான்.

அம்மா! இதோ பார்! எனக்(கு)
அத்தான் தந்த ரூபாய்!
அம்பிப் பயல் வாங்கி
ஆகா யத்தில் எறிந்தான்.

அம்மா! இதோ பார்!—எனக்கு
அக்காள் தந்த அல்லிப்பூ!
அம்பிப் பயல் வாங்கி
ஆகா யத்தில் எறிந்தான்.

அம்மா! இதோ பார்!—நான்
அமுதம் உண்ணும் தட்டை!
அம்பிப் பயல் எடுத்து
ஆகா யத்தில் எறிந்தான்.

"கம்பதாசன்"

சூரியன்

காலைப் பொழுதில் கடற்கரையில்—ஒரு
காட்சியைப் பார்க்கவும் வேண்டுமம்மா!
வேலையி லிருந்து சூரியன்—தேரினில்
ஓடி வருவதைப் பாருங்கம்மா!

இன்னல் படுத்தும் இருளணங்கு—இங்கே
இருக்க மாட்டாமல் ஓடுதம்மா!
சன்னல் வழியாய் கிரணங்கள்—இல்லில்
சோதி அளிக்குது பாருங்கம்மா!

ஆம்பலும் வாடிக் குவிந்ததம்மா!—உயர்
அம்புயம் கண்டு களிக்குதம்மா!
சோம்பலின் கன்றுகள் தேம்புகின்றார்!—இனித்
தூங்க முடியாதென்று ஏங்குகின்றார்!

மக்களை நோயால் வருத்திடும்—அணுக்கள்
மாய்ந்திடும் செய்தியைக் கேளுமம்மா!
தக்க பருவத்தில் தானியங்கள்—மேனி
தந்து செழித்திங்கு ஓங்குதம்மா!

கோடி விளக்குகள் ஏற்றிடினும்—அவை
கூடியே நன்றாய் ஒளிவிடினும்
மாடிகள் உச்சியில் வைத்திடினும்—இந்த
மாட்சிமை கொண்டு ஒளிவிடுமோ?

ஏ. மீனாட்சி B. A., B. T.,

வெயில்

பொழுது விடிந்ததம்மா !—வெயில்
பொங்கி வருகுதம்மா !
புள்ளினம் யாவையுமே—எங்கோ
புறப்பட்டு ஓடுதம்மா !

வாடா மல்லிகையும்—இப்போ
வாடி வதங்குதம்மா !
வற்றாக் குளங்களெல்லாம்—நொடியில்
வற்றி வறளுதம்மா !

வானத்தை நோக்கிடிலோ—வெறும்
வறட்சியே காணுதம்மா !
எத்தனை நாளைக்குத்தான்—இந்த
எரிக்கும் வெய்யிலம்மா !

கன்னங் கருமுகிலை—எந்தன்
கண்கள் விரும்புதம்மா
மழைதான் பொழிவதற்கே—ஈசன்
மனந்தான் இரங்கலையோ ?

ரா. ஆறுமுகம்

அந்தி

அந்திப் பொழுதிப்போ ஆனதடா!—வெய்ய
ஆதவன் மேற்கில் விழுந்தானடா!
சந்தித் தொருபோர் முடிந்ததடா!—இருள்
தானதில் நின்று நிலைத்ததடா!

காலம் கருதி மறைந்ததோடா!—உடல்
காயத்தில் ரத்தம் வழிந்ததோடா!
ஞாலம் முழுதும் சிவந்ததடா!— அந்தி
ஞாயிறும் செம்மேனி யானதடா!

மாலை விளையாட்டினி யேனடா!—இருள்
வந்துதன் ஆட்சியை நாட்டுதடா!
வேலை யுனக்கு இருக்குதடா!—தம்பி!
வீட்டில் படிக்கவும் வேண்டுமடா!

சேவல் கோழிகூட்டிற் சேர்ந்ததடா!– எங்கும்
செவ்வொளி மெல்லக் கருகுதடா!
ஆவல் மிகவெளவால் பறக்குதடா!—கூட்டில்
ஆந்தையும் எட்டியே பார்க்குதடா!

எத்தனை தோற்றங்கள் காணுதடா!—வானில்
என்னென்ன மாற்றம்உண் டாகுதடா!
நித்தம்இக் காட்சிகள் தோன்றுதடா!–காணில்
நீளும் நினைப்பிற்கு இணைஎன்னடா!

கரு. சுப்பையா

வானவெள்ளி

விண்ணில் தளர்நடை போட்டுலவும்—எழில்
வீசிடும் தண்மதிப் பெண்மகவு
கொண்டல் அன்னை தனைக் கண்டவுடன்—ஓடிக்
கொஞ்சும் சிரிப்புதிர் முத்துக்களோ !

வானிலே யெழுந்த காவனத்தில்—பூத்த
வாடா முல்லை மல்லிகையோ ?
நானில மீது பெறற்கரிய—ஜோதி
நல்கிடும் முத்து வயிரங்களோ !

ஆகாய வயலில் மேனி—செழித்திட்ட
அற்புத நெற்கதிர்க் கொத்துக்களோ !
ஏகப் பிறைமதி கொண்டரிந்து—வான்
எங்கும் சிதறிய நெற்கதிரோ !

மேலைக் கடல்ரவி கும்மாளம்—போட
விண்ணில் தெறித்த திவலைகளோ !
மாலைப் பிறைமதிப் பொற்கலத்தால்—திரு
மாது தெளித்திடும் தெள்ளமுதோ !

நீலக் கருவான வீதியெலாம்—ஒளி
நின்றொளிர மின்னும் மின்மினியோ !
கோலச் சுடரிளங் கன்னியர்கள்—ஏற்றிக்
குலவும் கார்த்திகைத் தீபங்களோ !

என். இராகவன்

வானவில்

வானத்தில் வளைந்து நின்ருய்
வானவில்லே !—நீ
வந்தவழி சொல்லுவாயோ
வானவில்லே !
கானத்திலே பாடுகிறேன்
வானவில்லே !—நீ
காட்டுவாய்உன் அழகெல்லாம்
வானவில்லே !

சூரியன் கிழக்கிருக்க
வானவில்லே !—நீ
தோன்றுகிருய் மேற்குப்பக்கம்
வானவில்லே !
நீரில் நிறைந்த மேகம்
வானவில்லே !—உன்னை
நேரே சுமப்பதேனே
வானவில்லே !

எத்தனை அழகுக்கொள்ளை
வானவில்லே !—இது
யாருனக்குத் தந்தவரோ
வானவில்லே !
அத்தனை நிறங்களையும்
வானவில்லே !—உனக்கு
ஆண்டவன் அமைத்துவிட்டான்
வானவில்லே !

" கனகம் "

வானவில்

வானக வீதியில் வந்துநின்று—பல
வர்ண ஜாலங்கள் செய்திடவே
வானக வீதியில் ஊர்ந்துவரும்—ஒளி
வண்ணப் பருதி எனைப்படைத்தார்.

பங்கயம் குவளை பாரிஜாதம்—முல்லைப்
பன்னிற மான மலர்களிலே
பொங்கிடும் நிறமெல் லாம்பெயர்த்து—ஒளி
பூசியே எழிலைச் சூட்டிவிட்டான்.

கார்முகில் என்னுமோர் கட்டழகன்—என்னைக்
கண்டவுடன் ஆசை கொண்டுவிட்டான்
பூரண மானதோர் புன்னகையால்—அன்புப்
புயல்மழை முத்தம் பொழிந்துவிட்டான்.

தேனினும் இனிய நீர்த்துளியால்—என்னைத்
தெளித்துமே பொல்லாக் குறும்புசெய்வான்
நாணமாய்க் கண்களை மூடிடுவேன்—உங்கள்
நானிலம் விட்டுநான் ஓடிடுவேன்.

"குத்தாலநாதன்"

மழை

கொட்டுமழையே! நன்றாய்க்
கொட்டுமழையே!
குளங்குட்டை நிறைந்திடக்
கொட்டுமழையே!
நட்டபயிர் தழைத்திடக்
கொட்டுமழையே!
நாலுதிசையும் சடசடெனக்
கொட்டுமழையே!

கத்திவெட்டுப் போலமின்னிக்
கொட்டுமழையே!
கனத்த இடிமுழக்கிக்
கொட்டுமழையே!
தத்துகின்ற தவளைகத்தக்
கொட்டுமழையே!
தரணியெல்லாம் வாழ்ந்திடவே
கொட்டுமழையே!

சொக்கலிங்கம்

மழை

வீதி நடுவில் ஒன்றுசேர்ந்து
விதம்வித மாக ஆடினோமே
பாதி ஆட்டம் ஆடுமுன்னே
'படபட' என்று பெய்ததுவே!

வெள்ளிக் கம்பி போலபெய்து
விரட்டி விட்டது எங்களையே
துள்ளிக் குதித்து வீடுசென்றோம்
துரித மாக யாவருமே.

நின்ற பிறகு வீதியெல்லாம்
நெடுகத் தண்ணீர் ஓடிடவே
ஒன்று சேர்ந்து 'குடுகுடெ'ன்று
ஓடி வந்தோம் நாங்களுமே.

பார்ப்பதற்கு அழகழகாய்ப்
பலவிதத்தில் கப்பல்களைப்
பேப்பராலே செய்துவிட்டுப்
பின்தொடர்ந்து ஓடினோம்.

ஆடிஆடிச் செல்லும்கப்பல்
அதைத்தொடர்ந்து ஓடியே
ஆடிப்பாடித் திரிந்ததாலே
அதிகநேரம் சென்றதே.

அழ. வள்ளியப்பா

நதி

பாம்பு நெளிவதுபோல்
பலவளைவு கொண்டநதி
பாயும் புனலழகு
பார்க்கத் தெவிட்டாது

மலைமீது இருந்துநதி
பாய்ந்து ஓடும்விதம்
பார்க்கப் பயங்கரமாம்
பலஒலிகள் எழுப்பிடுமாம்

கன்னிக் கலைப்பெண்கள்
கனிவு நடையுடனே
நதியும் நடைபயில்வாள்
நல்ல தரைவெளியில்

துள்ளிக் குதித்தோடி
"துருதுரு" நுரையெழுப்பி
கள்வெறி கொண்டதுபோல்
களிப்பாள் சிலவிடத்தில்

பாய்ச்சல் தெளிந்துவிடும்
பதிந்து நடைபயின்று
பதியான கடலரசன்
பக்கல்போய்த் தலைகுனிவாள்.

எஸ். சிதம்பரம்

ஆறு

ஆறே! ஆறே! உன் கதையை
அறிய விரும்பி நின்றேனே
கூறி டாயோ சற்றுநின்று
கூறி நீயும் செல்லலாமே.

(ஆறு சொல்கிறது.)

மலையிலே பிறந்துவந்தேன்
மழையாலே வளர்க்கப்பட்டேன்
பலஊற்றுத் தொட்டிலிலே
பாங்காய் உறங்கிவந்தேன்

ஒருநாட் காலை வேளையிலே
ஓடை யொன்றாய் நான்மாறி
அரிய பலவாம் விளையாட்டை
ஆடித் தீர்த்தேன் அன்றுதினம்

காயும் தணலாம் இதழ் விரித்தே
காதல் நோக்கோ டெனையழைத்த
தூய மலரின் கூட்டங்களைச்
சுமந்து சென்றேன் வெளியெல்லாம்

இன்பக் காட்சியும் முடிகிறதே
என் னலை யெழுச்சியும் ஓய்கிறதே!
துன்பக் கடலும் இரைகிறதே!
தொலைவில் இலையென் முடிவதுவே!

முருகு. சுப்பிரமணியம்

மலர்

சின்னப் பூவே !
சிங்கார எழில்மலரே !
சிரித்துத் தலையாட்டி
"வா" என்று அழைக்கின்றாய் !

சிறுகுழந்தை காட்டுமொரு
சிரிப்பில்உன் ஒளிதான்
கன்னங் குழியுமொரு
கலையிலும் உன்னொளிதான்

காற்றடிக்கும் போதினிலே
களித்துநீ சிரமாட்டி
மோனத்தில் இருக்கின்றாய்
முதிர்ந்தஒரு கவியைப்போல்

பச்சபசும் இலைகளூடே
பலவிதமாய்க் கலகலத்துக்
கண்மூடி விளையாடிக்
களித்துநீ ஆடுகின்றாய்.

தெவிட்டாத தேன்கொடுக்கும்
தேமதுரச் சிறுமலரே !
சின்னஞ் சிறுகுழந்தை
போன்றதொரு எழில்மலரே !

எஸ். சிதம்பரம்

பூக்கள்

பட்டம்மா நீ பாரடி,
பலவிதத்தில் புஷ்பங்கள்
சிட்டுப்போல மலரெலாம்
சிரித்தழைக்கப் பாரடி!

பட்டுப்போல் வர்ணங்கள்
பலவிதத்தில் காணுதே
மொட்டுப்பூக்கள் காலையில்
தட்டுப்போல் விரியுமே!

எட்டுத்திக்கும் வாசனை
எழுந்துவீசிச் செல்லுதே!
வட்டமிட்டு வண்டுகள்
வந்துதேனை உண்ணுதே!

தட்டில்கொய்து மலர்களைத்
தலையில் வைத்து மகிழுவோம்
கொட்டுமேளம் கேட்டதும்
கோயிலுக்கு ஓடுவோம்!

அழ. வள்ளியப்பா

ரோஜா

உலகத்தின் பசுமையெலாம்
ஒன்ருகச் சேர்ந்ததினுல்
உலேவகற்றும் இதழ்களுடன்
உருவாகி வந்தாயோ ?

மனதிலெழும் கற்பனேகள்
மாயாமல் உன்னுருவாய்ப்
புனிதத்தைப் பெற்றதுவோ ?
புகழெல்லாம் கொண்டதுவோ ?

என்னுழைப்பின் ஏற்றமெல்லாம்
இங்கேயுன் செவ்வுடலில்
நன்மணத்தை வீசிடுமோ ?
நறவெல்லாம் கொட்டிடுமோ ?

காலேயிலே கவலேனத்தும்
கடிதினிலே மாற்றுதற்குச்
சோலேயிலே பூவாரிச்
சுந்தரமே வந்தாயோ ?

உன்னுடைய மாதாவாம்
ஒளிச்செடியின் இளமையினே
என்முன்னே காட்டிடவே
இவ்வெழில் பெற்ருயோ ?

வாழ்க்கை சிறிதெனினும்
வாழுங்கால் இன்பத்தில்
மூழ்கும் நிலேபெற்ருய் !
மூவாத கற்பகமே !

தே. ப. பெருமாள்

தாமரை

குளத்தில் தாமரை பூத்ததம்மா !—அது
கோலம் முழுதையும் சொட்டுதம்மா !
உளத்தில் மகிழ்ச்சி யூட்டுதம்மா !—நல்ல
ஊக்கம் நரம்பினில் ஏற்றுதம்மா !

மணத்தை அள்ளி வீசுதம்மா !—அது
மண்ணகம் கவர நிற்குதம்மா !
பணமோ காசோ வேண்டாமம்மா !—கூடிப்
பறித்து மகிழ்ந்திட வேண்டுமம்மா !

ஓரிதழ் கன்னம்போற் காணுதம்மா!-சொக்கும்
ஓரிதழ் வாயையும் ஒக்குமம்மா !
ஆரிதைப் படைத்துவிட் டாரம்மா !—இந்த
அதிசயம் எவரேசொல் வாரம்மா !

ஓரிதழ் கைபோலக் காணுதம்மா!—மற்றும்
ஓரிதழ் கண்ணையும் ஒக்குமம்மா !
காரியம் எப்படி வந்ததம்மா !—மண்ணில்
கண்டு பிடிப்பவர் உண்டோவம்மா !

வண்டுகள் பறந்து பாடுதம்மா !—இன்ப
மதுவை யுண்டு மயங்குதம்மா !
கண்டுளம் இன்பம் அடையுதம்மா !—நாமும்
களிந்து நல்கிட வேண்டுமம்மா !

" தில்லைக்கூத்தன் "

வசந்தம்

வசந்தம் வந்த தம்மா !—வானும்
மழை சொரிந்த தம்மா
கசந்த வாழ்வினிலே—புதிய
களி பிறக்குதம்மா !

முல்லை சிரித்த தம்மா !—மணமும்
வீசிப் பரந்த தம்மா !
செல்லுது தும்பி யம்மா !—இன்பத்
தேனைப் பருகு தம்மா !

மயில்கள் ஆடு தம்மா !—புள்ளி
மான்கள் துள்ளு தம்மா !
குயில்கள் பாடு தம்மா !—கிளையில்
கிளிகள் பேசு தம்மா !

தாமரை யாடு தம்மா !—மனதில்
தளர்ச்சி மாற்று தம்மா !
பூமரக் குயிலிசை யாய் !—கானம்
பொங்கி வருகு தம்மா !

காவில் மரங்க ளம்மா !—இன்பக்
கனிகள் சிந்து தம்மா !
பூவில் வாழ்க்கை தன்னில்
போகம் பெரு தம்மா !

" தில்லைக்கூத்தன் "

தோட்டம்

ஊருக்குப் போய்வரும்
நாளையிலே—மிக
உரத்திடும் வெய்யில்
வேளையிலே
ஆருக்கும் தாங்காத
பசிகொண்டு—நான்
அங்கொரு தோட்டத்தில்
புகக்கண்டு

பழங் கொடுத்தது
மாமரம்—என்
பசி தொலைத்தது
மாமரம்
நிழல் கொடுத்தது
மாமரம்—துயர்
நீங்க வைத்தது
மாமரம்

தாகம் தணித்தது
தென்னைமரம்—மணம்
தந்து மலர்ந்தது
புன்னைமரம்—உற்
சாகம் பிறந்தது
வீடுவந்தேன்—மரம்
உதவி செய்ததை
நான் நினைந்தேன்

" பாரதிதாசன் "

தென்னைமரம்

வானை நோக்கி வளருந் தென்னை
மரமே! இந்த மாநில மீதில்
உன்னைப் போலே உதவிகள் செய்யும்
எண்ணம் உடையார் யாவரே உள்ளார்!
நின்றன் சின்னப் பிராயந் தன்னில்
ஏதோ சிரமம் எடுத்த துண்மை
இன்றோ எமக்கு நின்னால் அதிக
பாடுகள் இல்லை பயன்தா னுண்டு
காலால் வெறுநீர் காணும் நீயோ
தலையால் இளநீர் தந்திடு கின்றாய்!
வீடு நிறைந்த விளக்குக ளேற்ற
தின்னும் பண்டம் பலவும் செய்ய
இனிய எண்ணெய் இலங்கிடு காயால்
நித்தம் தருவாய் புத்தம் புதிய
பாளையும் தோரணப் பாங்குறு கூந்தலும்
திருமணம் சிறக்கத் தினம்தரு கின்றாய்
காயின் நாரால் காணும் பயன்கள்
சிறிதோ! சிறப்புறு கப்பலுங் கட்ட
உதவுதல் சிறிய உதவிய தாமோ?

சொக்கலிங்கம்

செடியின் கதை

சின்னஞ் சிறுவிதையாய்—மண்ணில்
சேர்ந்து வாழ்கையிலே
உன்னும் இறையருளால்—முளையாம்
அருளைப் பெற்றேனே!

உறக்கம் கொள்கையிலே—வான
ஒளியும் நல்மழையும்
மறத்தல் இன்றிவந்தே—என்றன்
மயக்கம் தீர்த்தவம்மா!

வெளியில் வந்திடுக—என்றவை
விரும்பிக் கூப்பிடவே
தெளிவைப் பெற்றேநான்—வரவே
சிந்தை இசைந்தேனே!

வையகம் வந்தேனே—இன்ப
வனப்பைக் கண்டேனே
மெய்யும் இசைபெறவே—இந்த
மேதினி காப்பேனே!

தே. ப. பெருமாள்

முல்லை

வாடும் உயிர்க்கணம் யாவினுக்கும்—மிக்க
வன்மை புகட்டும் இயற்கையன்னை
ஆடும் பசுங்கொடி யின் உருவில்—வினை
ஆக்கிக் களித்து நகைத்தனளோ?

வஞ்சனை நீங்கியோர் நெஞ்சிதுவோ?—சிமிழ்
வாயில் முளைத்திடு முத்திதுவோ?
கொஞ்சும் குழந்தையின் சொல்லிதுவோ?—கலை
கூறும் வெண்ணிறப் பண்ணிதுவோ?

தென்றலில் நன்மணம் தான் கலக்க—நிலம்
தேடி யெழுந்திட்ட விண்ணமுதோ?
கன்னங் கருங்குழல் தான் மகிழ—இருள்
காட்டிடை பூத்திட்ட வெண்மதியோ?

பஞ்செனும் மெல்லிய வண்டினங்கள்—சுவை
பார்த்துக் கலந்திடும் இல்லிடமோ?
நஞ்செனும் வெஞ்செயல் கள்ளரக்கன்—உரு
மாறி யொளியும் மறைவிடமோ?

கண்ணிமை மூடித் துயின்றிடினும்—முல்லை
கண்டு மகிழும் கனவதனால்
என்றும் இளநகை காட்டிடுமே—வாழ்வு
இன்பம் பெறுமோர் வழிபுகட்டும்

த. ப. நாதன்

கொடிகள்

எங்கள் வீட்டுக் கொல்லையிலே
இன்பம் ஊட்டும் பீர்க்கன்கொடி
தங்க நிறம்போல் பூப்பூத்து
தலையை ஆட்டிக் கூப்பிடுது !

எங்கள் வீட்டுக் கொல்லையிலே
இலைகள் செழித்த அவரைக்கொடி
எங்கும் படர்ந்து காய்காய்த்து
இங்கே வாவென் றழைக்கிறது !

எங்கள் வீட்டுக் கொல்லையிலே
எழில்மிகப் படர்ந்த புடலங்கொடி
தொங்கும் பாம்பெனக் காய்காய்த்துத்
துரத்தப் பார்க்குது பயங்காட்டி !

எங்கள் வீட்டுக் கொல்லையிலே
ஏறிப் படர்ந்த சுரையின்கொடி
தங்கும் காய்கள் பலகாய்த்து
தாவிப் பார்க்கச் செய்கிறது !

எங்கள் வீட்டுக் கொல்லையிலே
இனிமை காட்டும் பறங்கிக்கொடி
மங்கள மாகக் காய்காய்த்து
மணத்தில் களிக்க நிற்கிறது !

" தமிழ்வாணன் "

பசும்புல்

பச்சைக் கம்பளம் விரித்ததுபோல்
பாரில் வளரும் பசும்புல்லே!
இச்சை மிகவே எங்கெங்கும்
எழில்பெறப் பரவும் வகையென்ன?

பூமித் தாயின் பொன்னுடம்பைப்
போர்த்துக் காக்கும் போர்வையென
நீமிக் கெங்கும் நிறைந்தனையோ?
நேசங் கொள்ள வளர்புல்லே!

பார்மகள் மேனி பச்சையெனப்
பார்த்தோர் சொல்லும் படியாக
கார்மிகப் பெய்த காலத்தில்
களித்துச் செழித்து வளர்கின்றாய்!

ஆடு மாடுகள் அகங்களிக்க
ஆவல் காட்டி அழைக்கின்றாய்!
காடு மேடுகள் களிப்படைய
காட்சியில் சிறந்து காண்கின்றாய்!

பச்சை நிறமே கொண்டிருந்தும்
பசுவின் வயிற்றில் போனவுடன்
இச்சை கொள்ளும் வெள்ளைநிறப்
பாலாய் மாறும் விந்தையென்ன?

'இளங்குமரன்'

மணி வெளியீடுகள்:

காதற் கனி
(இலக்கியச் சிறு கதைகள்)
தி. சி. குழந்தைவேலன்
விலை ரூ. 1—4—0

முள்ளும் மலரும்
(சிறு கதைகள்)
இளங்குமரன் எழுதியது
விலை ரூ. 1—2—0

இராசமாதேவி
(சரிதம் தழுவிய நாடகம்)
ப. நீலகண்டன்
விலை ரூ. 1—4—0

இன்பவல்லி
(கற்பனை நாடகம்)
ப. நீலகண்டன்
விலை ரூ. 1—0—0

சர விளக்கு
(நகைச்சுவைக் கட்டுரைகள்)
'சுகி'
விலை ரூ. 2—0—0

விரைவில் வெளிவரும்

அமுத மொழி

குழந்தைப் பாடல்கள்

அரிய கருத்துக்கள் நிரம்பிய
இனிய பாடல்களின் தொகுதி

**யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்
முதலிய பல அறிஞர்கள் பாடியவை**

★

இன்ப மொழி

குழந்தைப் பாடல்கள்

விலங்கு பறவை முதலியவை பற்றிய
அழகிய பாடல்களின் தொகுதி

**கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை
முதலிய பல அறிஞர்கள் பாடியவை**

மணி மன்றம்

தமிழ் நூல் வெளியீட்டகம்

மதுரை ரோடு :: திருச்சிராப்பள்ளி

WRAPPER PRINTED AT THE CITY PRESS, TRICHY. TY. 27 C—2500.